# கடலோடு கரைந்த கடற் கரும்புலிகள்

'மகனைப் பார்த்து எவ்வளவு காலமாகிவிட்டது! இப்ப எப்படி இருப்பானோ?'

அம்மாவுக்கு ஏக்கம். மூன்றாண்டுகளுக்கு முன்பு திரும்பவும் சிங்களவர்கள் தாக்கத்துவங்கிய போது, ''புலிக்கு ...'' என்று புறப்பட்டுப் போனவன்தான். அதன் பிறகு அவர்கள் ஒருநாள்கூடக் காணவில்லை.

இடையில் ஒரு நாள் -

சண்டை ஒன்றில் மைன்ஸ் வெடித்து பிள்ளைக்குக் கால் போய் விட்டதாம் என்ற துயரச் செய்தி அம்மாவுக்கு எட்டியது.



தலைவர் அவர்களோடு கடற் கரும்புலிகள் கப்டன் மதன் மேஜர் வரதன்.

அம்மாவின் கண்களில் அருவி. வேதனையால் துடித்துக்கொண்டிருப்பானோ......? ''அம்மா......!'' என்று அழுவானோ ......? அவள் மகனையே நினைத்துக்கொண்டிருப்பாள். கொஞ்ச நாட்களாக அம்மாவின் இரவுகள் தூக்கமற்று நீண்டு கழிந்தன.

காலம் அசைந்தது -

''பிள்ளை இப்ப யாழ்ப்பாணத்திலையாம்...... கடற்புலியாக ஒளிவிலை நிக்கிறானாம் ... சிங்கள நேவியிட்ட இருந்து சனங்களைக் காப்பாத்துற வேலையாம்......'' அவர்கள் அறிந்தார்கள்.

'எவ்வளவு காலமாகிவிட்டது ..... ?எப்படி இருக்கிறானோ .....?' மகனைப் பார்க்க அம்மா ஆசைப்பட்டாள். பாசமும், ஆவலும் அவளை அவசரப்படுத்தியது.

சோதனைச் சாவடிகள். இராணுவக் கெடுபிடிகள். கொச்சைத் தமிழில் துளைத்தெடுக்கும் கேள்விகள். ரெயிலில் துவங்கி தாண்டிக்குளத்தில் முடிந்த துயரப் பயணத்தின் இறுதியில், அம்மா யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தாள்.

மட்டக்களப்பு தொடர்பகத்தில் பெயரைப் பதிந்து, பிள்ளைக்குத் தகவல் அனுப்பிவிட்டு ஆவலோடு காத்திருந்தாள். தங்கியிருந்த வீட்டின் வாசலையே பார்த்துக்கொண்டிருக்க ஒரு நாள் கடந்து போனது; ஆனால் மகன் வரவில்லை.

''ஒளிவிலை நேவிக்கு கரும்புலித் தாக்குதல் நடந்ததாம் ...... அங்க நேவியும் முடிஞ்சதாம்......'' என்று ஒருசெய்தி மட்டும் வந்தது.

எல்லோருக்கும் சோகம் கலந்த மகிழ்ச்சி. அம்மாவுக்கும்தான். மாலையானதும் பரபரப்பாகப் பேசப்பட்ட அந்தச் செய்தியைத் தாங்கி, 'ஈழநாதம்' விசேட பதிப்பு அம்மாவின் கைகளிற்கு வந்த போது...... அந்தப் படங்கள்......! அந்தப்படம்......! அம்மா உற்று உற்றுப் பார்த்தாள்...... கண்கள் இருண்டன......! உடல் விறைத்துப் போனது. நம்பவே முடியவில்லை. அம்மாவின் பிள்ளை......வரதன்...? அவன்தானா என்று பெயரை மீண்டும் மீண்டும் பார்த்தாள். ஆம்! அது அம்மாவின் பிள்ளையேதான். அள்ளி அணைத்து முத்தமிட ஆசையோடு ஓடோடி வந்தானே...... அதே பிள்ளைதான்.

கறியில்லாமல், காசில்லாமல் அடுப்பெரியாத நாட்களில்- ''சோறு காய்ச்சனை கறியோட வாறன்'' என்று, துவக்கெடுத்துக் கொண்டு காட்டுக்குப் போவானே...... அதே மகன்!

வீதியில் சிங்களப் படை மறித்து, கிறனேட்டைக் கையில்கொடுத்து ''வாயுக்குள்ள போடடா ......'' என்றபோது, ''விருப்பமெண்டா உன்ர வாயுக்குள்ளபோடு .....'' என்று துணிவோடு திருப்பிக் கொடுத்துவிட்டு வந்தானே...... அந்த மகன்!

சோகத்தோடு அணைத்து நிற்கும் தலைவனுக்கருகில், பூரிப்போடு சிரித்து நின்றான் அந்தக் கரும்புலி.

தாங்கமுடியாத பெரும் சுமையாய் துயரம் நெஞ்சை அழுத்த - அம்மா அழுதாள். கவலையைத் தீர்க்க கண்ணீர் தீரும்வரை அழுதாள்.

• •

கந்தசாமி ஐயாவுக்கும் அம்மாவுக்கும் பிறந்த ஒன்பது குழந்தைகளுக்குள் நான்காவது வரதன். இராமச்சந்திரன் என்பது இயற்பெயர்.

1973ஆம் ஆண்டிற்குப் பிறகு,ஒவ்வொரு வருடமும்,தமிழ்ப் புத்தாண்டிற்கு இரண்டு நாள் முன்னதாக வரதனின் பிறந்த நாள் வந்து போகும்.

கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் ஆர்வம் மிகுந்தவனாக துடிப்புடன் பள்ளிக்குப் போனவனை, அப்பாவோடு வயலுக்குப் போகவைத்தது குடும்ப நிலை.

குடும்பச் சுமை பகிர்ந்து உழைத்து, 16 வயதுவரை வீட்டோடு இருந்தவனை இயக்கத்துக்குப் போக வைத்தது நாட்டுநிலை.

மன்னம்பிட்டிக்குக் கிழக்கே 15 மைல் தூரத்திலுள்ள கல்லிச்சை வடமுனைதான் ஊர். ஆக்கிரமிப்பின் கொடிய வலியை அனுபவிக்கும் எங்கள் தாயகத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்று.

மட்டக்களப்பில் பயிற்சியை முடித்தவனுக்கு அங்கு கண்ணி வெடிப் பிரிவில் பணி.

சிங்களப் படையுடன் மீண்டும் போர் துவங்கி - வெடியோசைகளால் நிறைந்து, நகர்ந்துகொண்டிருந்தநாட்களுள் ஒன்று.கல்லிச்சை வடமுனைக்கும் - பெண்டுகல் சேனைக்கும் இடையில் எதிரி விதைத்துவிட்டுப் போயிருந்த மிதிவெடிகளுள் ஒன்று, விநியோக வேலைகளில் ஈடுபட்டிருந்த வரதனின் வலது காலைப் பிய்த்தது.

காட்டு முட்கள் கீறிக் கிழிக்க நரக வேதனைக்கு நடுவில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டான் வரதன். சிகிச்சை முடிய புகைப்படப் பிரிவில் பணி.

• •

ஒளிவிலிருந்த கடற்புலிகளின் தளம்.

எங்கள் அன்புக்கினிய மக்களை, இரத்தப்பசி கொண்டலையும் இனவாதப் பேய்களிடமிருந்து காத்து நிற்கும் உன்னத பணியில் அவர்கள்.

இரவில் விழித்திருந்து அலைமடியில் காவல். பகலை இரவாக்கித் தூங்க முயலும் வாழ்வு.

முகாமில் எப்பொழுதும் கலகலப்பை நிறைத்திருப்பவன் மதன்தான். துடிதுடிப்பான சுபாவம் அவனுடையது.

வரதனும், மதனும் உற்ற நண்பர்கள். புகைப்படப் பிரிவில் ஒன்றாக வேலைசெய்தபோது மெல்ல அரும்பிய உறவுதான் - இன்று உயிருக்குயிரான நெருக்கமாக இறுக்கம் பெற்றிருந்தது.

ஒன்றாகத் தலைவருக்குக் கடிதம் எழுதி, ஒன்றாகக் கடற்புலிகளுக்கு வந்து, ஒன்றாகக் கால்களோடு நீந்திப் பழகி, பயிற்சி பெற்று, படகேறிக், கடலில் களமாடி, ஒன்றாக ஒளிவிலிலும் பணி செய்தவர்கள் ஒன்றாகக் கரும்புலிக்கும் பெயர் கொடுத்து, இறுதியிலும் ஒன்றாகவே போனார்கள்.

• •

மதன் துடிதுடிப்பானவன். ஒற்றைக் காலில்நின்று கூத்தாடி... வலைதடியோடு துள்ளியோடி...... கும்மாளமடித்தபடி திரிந்து ......அவன் ஓய்ந்ததேயில்லை.

திருமலைக் காட்டில் மிதிவெடி ஒன்று சுழட்டிவிட்ட இடதுகாலுக்குப் பதிலாக மதனுக்கு ஜெய்ப்பூர் கால் கொளுவப்பட்டிருந்தது. பொய்க்காலைக் கழற்றிவிட்டு, ஒற்றைக் காலில் மரத்திலேறி மாங்காயும் இளநீரும் பிடுங்கித் தந்து, எங்களோடு சேர்ந்திருந்து சாப்பிட்டு மகிழ்ந்த உயர்ந்த நண்பன் அவன்.

இரவெல்லாம் படகோடி கடலில் சமராடிவிட்டு, பகலில் ஓய்வெடுத்துத் தூங்கமுயலும் தோழர்களை ஊன்றுதடியால் தட்டிக் குழப்பித் தொந்தரவு செய்துவிட்டுத் துள்ளி ஓடி அவர்களுடைய அன்பான சினப்பிற்கும் ஆளாகின்றவன் அந்தக் குழப்படிகாரன். அவன் கூடத்தானும் இரவு சண்டைக்குப் போயிருப்பான்; ஆனால் பகலிலும் ஓடித்திரிவான்.

சண்டைக்குத் தயாரான ஓடுபாடுகள் இல்லாத - ஓய்வான ஒரு மாலைப்பொழுதில் - மதன் ஒரு தென்னைமர அடியில் சாய்ந்திருப்பான், கடற்காற்றோடு கலந்து ஒரு பாடல் விரியும். தன்னுடையது பாடுவதற்கு ஏற்ற ஒரு குரல் இல்லையென்பது தெரிந்திருந்தும் அவன் பாடுவான். அதில் ஒரு கவர்ச்சியிருக்கும்; அருகிலிருப்பவர்களை ஈர்க்கும்.

எப்போதும், எதிலும் கவனமில்லாத ஒருவனைப்போல பகிடி சொல்லித் திரிகின்ற மதன், தனது திறமையை வேலைகளின்போது செயலில் காட்டுவான். எங்களால் செய்யமுடியாமல் போகிற சில வேலைகளை, ஒரு காலை இழந்தவனாயிருந்தும் அவன் செய்து முடிப்பான். பெரும்பாலும் தவறுகள் செய்யாமலே இருக்கின்ற மதன், சக தோழர்கள் தவறு செய்யும் போது சொல்லித் திருத்துகின்ற போராளி.

மதனுக்கிருந்த இயல்பான குழப்படித்தனத்தால், வரதனோடு துவங்கிய ஒரு பகிடிச்சண்டை கடைசியில் சீரியசாக முடிந்தது. அந்த உயிர் நண்பர்கள் கதைக்காமல் பிரிந்துபோய்விட்டார்கள். அடுத்த 24 மணி நேரம் வெறுப்பூட்டுவதாகக் கழிந்தது. வரதன் குளிக்கப் போனான். எப்போதும் இருவரும் சேர்ந்தே போவார்கள்; இப்போது வரதன் தனியே. முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு மதன் ஒரு மரக்குத்தியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். ''போ'' என்று நட்புத் தூண்டவும் தன்மானம் தடுத்தது. ஆனாலும், அன்பே வென்றது. ஊன்றுதடியுடன் துள்ளிக்கொண்டு முந்தி ஓடிப்போய் வாளியை எடுத்து, வரதனுக்குக் குளிக்கவார்க்கத் தொடங்கினான் அவன். சேரனிடம் இதைச் சொல்லும்போது வரதனின் கண்கள் பனித்திருந்தன.

வரதன் அமைதியானவன் அதிகம் பேசத் தெரியாதவன், கதைகளை விட செயல்களிலேயே அதிக ஈடுபாடும் நம்பிக்கையும்கொண்டவன். ''கதைக்கும்போதெல்லாம் இயக்கத்துக்குப் பயன்படக்கூடியதாய் ஏதுங்கதையுங்கோடா'' என்று எங்களுக்குப் புத்தி சொல்பவன். அது, வெளியில் தெரியாமல் தனக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்த ஓர் எரிமலை.

அம்மா அப்பாவைப் பிரிந்து, உறவுகளைப் பிரிந்து நீண்ட